முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2020 யூலை

# (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advance Financial Accounting and Costing)

2020-10-03
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் பட்டியல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள்**

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

***1.1*** *முதல்* ***1.3*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. உமது விடைப் புத்தகத்தில் வினாக்களின் இலக்கங்களை ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** LKAS 02 – தொக்குகள் நியமம் தொடர்பாக சரியான கூற்றினை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க:

(1) அலுவலகப் பயன்பாட்டிற்காக வைத்திருக்கப்படும் கணினிகள் தொக்குகளாகக் கொள்ளப்படும்.

(2) தொக்குகள் கிரயத்தில் மாத்திரம் மதிப்பிடப்படும்.

(3) தொக்குகளின் கிரயமானது தொக்குகளின் கொள்வனவுக் கிரயத்தை மாத்திரம் கொண்டிருக்கும்.

(4) தொக்குகள் அதன் கிரயம் அல்லது நிகர தேறுகைப் பெறுமதி ஆகிய இரண்டிலும் எது குறைந்ததோ, அந்தப் பெறுமதியில் மதிப்பிடப்படும்.

(02 புள்ளிகள்)

**1.2** **வரையறுக்கப்பட்ட ABC (தனி) கம்பனி** இரண்டு கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுள்ளது. 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் அது வாடகையாக ரூபா 4,812,000/- இனைச் செலுத்தியிருந்தது.

கீழ்வரும் மீதிகள் **வரையறுக்கப்பட்ட ABC (தனி) கம்பனியின்** கணக்கேடுகளில் காணப்பட்டன:

*(ரூபா)*

| கணக்கின் பெயர் | 2019 ஏப்ரல் 01 இல் | 2020 மார்ச் 31 இல் |
|---|---|---|
| வாடகை முற்கொடுப்பனவு | 287,000 | 312,000 |
| நிலுவையிலுள்ள வாடகை | 212,000 | 184,000 |

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய சரியான வாடகைச் செலவு:

(1) ரூபா 4,609,000/-.
(2) ரூபா 4,759,000/-.
(3) ரூபா 4,865,000/-.
(4) ரூபா 5,015,000/-. (02 புள்ளிகள்)

**1.3** 2016 அக்டோபர் 01 ஆந் திகதி ரூபா 5,000,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றைக் கம்பனி 2020 மார்ச் 31 இல் ரூபா 3,000,000/- க்கு விற்பனை செய்தது. கம்பனி மோட்டார் வாகனங்களை ஆண்டிற்கு 25% இல் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்கின்றது எனின், இந்த மோட்டார் வாகனத்தின் விற்பனை மீதான இலாபம்:

(1) ரூபா 2,375,000/-.
(2) ரூபா 3,000,000/-.
(3) ரூபா 750,000/-.
(4) ரூபா 1,750,000/-. (02 புள்ளிகள்)

***1.4*** முதல் ***1.10*** வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.

**1.4** கிரயக் கணக்கீட்டின் இரண்டு (02) நோக்கங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.5** பரிப்பு (liability) எனும் பதத்தைப் பொருள்வரையறை செய்க. (02 புள்ளிகள்)

**1.6** கீழ்வருவன தொடர்பில் பங்குடமை ஒழுங்குச் சட்டம் 1890 இன் ஏற்பாடுகளைக் குறிப்பிடுக:

(a) பங்குடமையின் மூலதனம்
(b) பங்காளர்களின் சம்பளங்கள் (02 புள்ளிகள்)

**1.7** **A** யும் **B** யும் இலாப நட்டங்களை முறையே 2 : 1 எனும் விகிதத்தில் பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்கள் ஆவர். 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி **C** என்பவர் புதிய பங்காளராக இணைந்துள்ளதுடன் இலாப நட்டங்களை முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் பகிர்வதற்கு இணங்கினர்.

**A** மற்றும் **B** யினது அர்ப்பணிப்பு விகிதத்தை (sacrificing ratio) கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.8** LKAS 10 க்கு அமைவாக அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் ஆனால் நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக அதிகாரமளிக்கப்படுவதற்கு முன்னர் நிகழ்ந்த கீழ்வரும் ஒவ்வொரு நிகழ்வும் செம்மையாக்க நிகழ்வா அல்லது செம்மையாக்கம் அல்லாத நிகழ்வா எனக் குறிப்பிடுக:

(a) சாதாரண பங்குதாரர்களுக்கு பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம்

(b) அறிக்கையிடற் கால இறுதியில் இருந்த சில தொக்குகள் கிரயத்திலும் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டன.

(c) அறிக்கையிடற் திகதியின் முடிவில் இருந்த கம்பனியின் கடன்பட்டோர் ஒருவர் வங்குரோத்து நிலை அடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். (03 புள்ளிகள்)

**1.9** ஒரு கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து **பொருள் X** தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன:

வருடாந்தக் கேள்வி : 12,500 அலகுகள்

அலகொன்றின் ஆண்டிற்கான வைத்திருத்தல் கிரயம்: ரூபா 2/-

கட்டளை ஒன்றிற்கான கட்டளையிடற் கிரயம் : ரூபா 20/-

அலகொன்றின் கொள்வனவு விலை : ரூபா 125/-

*நீங்கள் கீழ்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்:*

சிக்கனக் கட்டளைக் கணியம் $= \sqrt{\frac{2DC_0}{C_h}}$

மேலுள்ளவற்றின் அடிப்படையில், சிக்கனக் கட்டளைக் கணியத்தைக் கணிப்பிடுக (EOQ).

(03 புள்ளிகள்)

**1.10** கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட ரோஸ் கம்பனியின் பணி 2500 (Job 2500)** தொடர்பாகப் பிரித்தறியப்பட்டவையாகும்:

நேர் மூலப்பொருள் : 5,000 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 25 வீதம்

நேர்கூலி : 200 மணித்தியாலம் - மணித்தியாலமொன்று ரூபா 500 வீதம்

உற்பத்தி மேந்தலை : நேர் கூலிக் கிரயத்தின் 150%

கம்பனி, கிரயத்தில் 20% இலாபம் வைக்கிறது.

**பணி 2500** க்கு அறவிட வேண்டிய விலையைக் கணிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

(a) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2020 சனவரி மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட டீகோ (தனி.) கம்பனியின் பொருள் D001** தொடர்பானதாகும்:

| திகதி | விபரம் | கணியம் (அலகுகள்) | அலகு விலை (ரூபா) |
|---|---|---|---|
| 2020.01.01 | ஆரம்ப மீதி | 5,000 | 75.00 |
| 2020.01.06 | கொள்வனவுகள் | 7,500 | 74.00 |
| 2020.01.10 | வழங்கல்கள் | 5,600 | - |
| 2020.01.18 | கொள்வனவுகள் | 5,000 | 72.00 |
| 2020.01.25 | வழங்கல்கள் | 4,000 | - |

கம்பனியானது நிறையேற்றிய சராசரிக் கிரய (WAC) முறையைப் பயன்படுத்தித் தொக்குகள் பேரேட்டினைத் தயாரிக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2020 சனவரி மாதத்திற்கான **பொருள் D001** க்கான தொக்குகள் பேரேட்டினைத் **தயாரிக்குக.**

(05 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ப்ளக் மார்க் (தனி.) கம்பனியின்** நான்கு ஊழியர்களினது 2020 பெப்ரவரி மாதத்திற்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| பெயர் | வழமையான வேலை மணித்தியாலத்திற்கான கூலி வீதம் | மாதத்தில் வேலை செய்த மணித்தியாலங்கள் |
|---|---|---|
| எஸ்.எம். கவீந்திர | மணித்தியாலமொன்றிற்கு ரூபா 100/- | 180 |
| எல்.வி. கயேஷா | மணித்தியாலமொன்றிற்கு ரூபா 110/- | 170 |
| ரி.பி. யமுனா | மணித்தியாலமொன்றிற்கு ரூபா 115/- | 160 |
| எஸ்.பி. ரொஷான் | N/A (ரூபா 35,000/- நிலையான அடிப்படைச் சம்பளம்) | N/A |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) சாதாரண வேலை மாதமொன்று (அடிப்படைச் சம்பளம்) 160 வழமையான வேலை மணித்தியாலங்களைக் கொண்டது. மேலதிக நேரக் கொடுப்பனவானது வழமையான மணித்தியாலக் கூலி வீதத்தின் 140% இல் கணிப்பிடப்படும்.

(2) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) தொழில்தருநர் மற்றும் ஊழியரின் பங்களிப்புகள் முறையே அடிப்படைச் சம்பளத்தின் 12% மற்றும் 8% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு (ETF) அடிப்படைச் சம்பளத்தின் 3% ஆகும்.

(3) மாதாந்த அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, எல்லா ஊழியர்களும் மாதாந்தம் ரூபா 3,000/- வாழ்க்கைச்செலவுப் படிக்கு உரித்துடையவர்களாவர்.

(4) **எஸ்.எம். கவீந்திரவும் ரி.பி. யமுனாவும்** காப்புறுதித் திட்டமொன்றிற்கு சந்தா செலுத்துவதுடன் அவர்கள் ஒவ்வொருவரினதும் மாதாந்தப் பங்களிப்புத் தொகையான ரூபா 500/- அவர்களது சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

தேவையான தகவல்களைக் காட்டி, 2020 பெப்ரவரி மாதத்திற்கான சம்பளப் பட்டியலைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட பீ சேவ் (தனி.) கம்பனியானது** தனி உற்பத்திப் பொருளான முகக் கவசங்களை உற்பத்திசெய்து 100 உருப்படிகளைக் கொண்ட பொதிகளாக விற்பனை செய்கிறது. இது வெட்டுதல் மற்றும் தைத்தல் என்ற இரு உற்பத்திப் பிரிவுகளையும் தொழினுட்பச் சேவைகள் என்ற ஒரு சேவைப் பிரிவையும் கொண்டுள்ளது. கம்பனிப் பதிவேடுகளில் இருந்து 2020 டிசெம்பர் மாதத்திற்காக கீழ்வரும் பாதீட்டுத் தகவல்கள் பிரித்தறியப்பட்டன:

| அடிப்படை | மொத்தம் | பிரிவுகள் | | |
|---|---|---|---|---|
| | | உற்பத்தி | | சேவை |
| | | வெட்டுதல் | தைத்தல் | தொழினுட்பம் |
| நேரில் கிரயம் (ரூபா) | 150,000 | 45,000 | 60,000 | 45,000 |
| தரைப் பரப்பு (சதுர மீற்றர்) | 4,800 | 1600 | 2800 | 400 |
| ஊழியர் எண்ணிக்கை | 250 | 90 | 120 | 40 |
| மின்சாரப் பயன்பாடு (கிலோவாற்று) | 2,200 | 600 | 1400 | 200 |
| எந்திரப் பெறுமதி (ரூபா '000) | 500 | 100 | 400 | - |
| கிரயப் பகிர்வு - தொழினுட்பம் | 100% | 45% | 55% | - |
| நேர் கூலி மணித்தியாலம் | 7,000 | 2,000 | 5,000 | - |

மாதத்திற்கான பாதிடப்பட்ட பிற மேந்தலைகள் கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---:|
| எந்திரப் பராமரிப்பு | 100,000 |
| கட்டட வாடகை | 360,000 |
| மின்சாரம் | 66,000 |
| ஊழியர் சேமநலன் | 400,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மேந்தலைகள் எவ்வாறு ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டு பகிரப்படுகிறது என்பதைக் காட்டும் கூற்றொன்றினைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் நேர் கூலி மணித்தியாலம் ஒன்றிற்கான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**கெமுனு துடுப்பாட்டக் கழகம்** என்பது அதன் அங்கத்தவர்களுக்கு விளையாட்டு வசதிகளை வழங்குகின்ற அதேவேளை அங்கத்தவர்களுக்கான போசனசாலை ஒன்றையும் இயக்குகிறது. 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **கெமுனு துடுப்பாட்டக் கழகத்தின்** கொள்ளல், கொடுத்தல் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது:

**கொள்ளல், கொடுத்தல் கணக்கு** *(ரூபா '000)*

| | | | |
|---|---:|---|---:|
| 2019 சனவரி 01 இல் மீதி மு/கொ/வ. | 10,200 | செயலகச் செலவுகள் | 1,500 |
| நன்கொடைகள் | 1,050 | தொலைபேசிச் செலவுகள் | 675 |
| அங்கத்துவச் சந்தா | 13,350 | மின்சாரச் செலவுகள் | 2,100 |
| போசனசாலை விற்பனைகள் | 40,000 | பயிற்சியளித்தல் செலவுகள் | 3,150 |
| | | போசனசாலை வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள் | 25,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 12,720 |
| | | மீதி/கீ./கொ./செ. | 19,455 |
| | **64,600** | | **64,600** |

சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு: *(ரூபா '000)*

| | **2019 சனவரி 01 இல்** | **2019 டிசெம்பர் 31 இல்** |
|---|---:|---:|
| கட்டடங்கள் - முன்கொணரற் பெறுமதியில் | 80,000 | 78,000 |
| விளையாட்டு உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 20,000 | 17,500 |
| போசனசாலை வழங்குநர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 8,000 | 12,000 |
| தொக்கு (போசனசாலை) | 5,000 | 7,000 |
| நிலுவையிலுள்ள அங்கத்தவர் சந்தா | 900 | 600 |
| முன்செலுத்திய அங்கத்தவர் சந்தா | 300 | 450 |
| அட்டுறு மின்கட்டணம் | 300 | 600 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) நன்கொடைகள் ஆண்டிற்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

(2) ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் சேர்ப்பனவோ அல்லது விற்பனைகளோ இல்லை.

(3) மின்சாரச் செலவுகளில் $^1/_3$ பங்கும் சம்பளம் மற்றும் கூலிகளில் $^1/_2$ பங்கும் போசனசாலை சம்பந்தப்பட்டவை ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **கெமுனு துடுப்பாட்டக் கழகத்திற்கு** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) போசனசாலையின் வியாபாரக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**ரஞ்சித், சுனில்** மற்றும் **திலக்** ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 5:3:2 எனும் விகிதத்தில் பகிரும் பங்குடமையொன்றின் பங்காளர்கள் ஆவர். **ரஞ்சித்தும் சுனிலும்** மாதாந்தச் சம்பளமாக ரூபா 20,000/- வீதம் பெறுவதற்கு உரித்துடையவர்கள்.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 1,600,000/-.

(2) 2020 மார்ச் 31 இல் பங்குடமையின் கணக்கேடுகளில் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டன:

| | **வரவு (ரூபா)** | **செலவு (ரூபா)** |
|---|---|---|
| 2019 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| **ரஞ்சித்** | | 2,250,000 |
| **சுனில்** | | 1,350,000 |
| **திலக்** | | 900,000 |
| 2019 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **ரஞ்சித்** | | 95,000 |
| **சுனில்** | 500,000 | |
| **திலக்** | 200,000 | |
| எடுப்பனவுகள்: | | |
| **ரஞ்சித்** | 780,000 | |
| **சுனில்** | 260,000 | |
| **திலக்** | 60,000 | |

(3) 2020 மார்ச் 31 இல் **திலக்** பங்குடமையிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்ததுடன், அதன் பின்னர் **ரஞ்சித்தும் சுனிலும்** இலாப நட்டங்களை முறையே 5:3 எனும் விகிதத்தில் பகிரும் வகையில் பங்குடமையைத் தொடர்வதற்குத் தீர்மானித்தனர்.

(4) 2020 மார்ச் 31 இல் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 1,200,000/- ஆக மதிப்பிடப்பட்டது. எனினும், பங்குடமையின் கணக்கேடுகளில் நன்மதிப்புக் கணக்கினைப் பேணுவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

(5) **திலக்கிற்கு** அவரது ஓய்வின்போது செலுத்த வேண்டிய தொகையை கடன் கணக்கிற்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் மூலதனக் கணக்கு (04 புள்ளிகள்)

(c) பங்காளர்களின் நடைமுறைக் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**அன்னி** ஒரு கம்பனியின் செயலாளராக கடமை புரிகிறார். நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 நிலைமை காரணமாக அவர் வீட்டில் முடங்கிக் கிடந்த காலத்தில் அவர் கேக் தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கும் **'அன்னியின் ஒன்லைன் உணவுகள்'** என்ற வியாபாரத்தினை ரூபா 100,000/- இனை முதலீடு செய்து 2020 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்தார். சகல கொடுப்பனவுகளுக்கும் **அன்னி** காசோலைகளைப் பயன்படுத்துவதுடன், அவர் சகல காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை காசேட்டில் பதிவு செய்கிறார். 2020 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த மூன்று மாத காலத்திற்கான **அன்னியின்** காசேடு கீழ்வருமாறு:

**அன்னியின் ஒன்லைன் உணவுகள்**

**காசேடு**

| திகதி | விபரம் | காசோலை இல. | பெறுவனவு (ரூபா) | கொடுப்பனவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 2020.04.01 | வைப்பு – **அன்னியின்** மூலதன முதலீடு | | 100,000 | - |
| 2020.04.01 | வாடகை (3 மாத அலுவலக வாடகை) | 637131 | | 31,500 |
| 2020.04.01 | நேர் மூலப்பொருளுக்கான கொடுப்பனவு (மா, சீனி, பட்டர்) | 637132 | | 36,000 |
| 2020.04.01 | ஏனைய நேர் மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவுகள் | 637133 | | 5,600 |
| 2020.04.01 | உபகரணக் கொள்வனவு | 637134 | | 50,000 |
| 2020.04.15 | காசு வைப்பு – விற்பனை | | 13,000 | |
| 2020.04.30 | காசு வைப்பு – விற்பனை | | 14,000 | |
| 2020.04.30 | வங்கிக் கட்டணங்கள் | | | 1,500 |
| 2020.04.30 | விளம்பரப்படுத்தல் | 637135 | | 3,500 |
| 2020.04.30 | மாதாந்த விநியோகச் செலவுகள் | 637136 | | 7,500 |
| 2020.04.30 | ஏனைய நேர் மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவுகள் | 637137 | | 4,500 |
| 2020.05.15 | காசு வைப்பு – விற்பனை | | 7,000 | |
| 2020.05.31 | காசு வைப்பு – விற்பனை | | 14,000 | |
| 2020.05.31 | ஏனைய நேர் மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவுகள் | 637138 | | 12,600 |
| 2020.05.31 | மாதாந்த விநியோகச் செலவுகள் | 637139 | | 7,500 |
| 2020.06.15 | காசு வைப்பு – விற்பனை | | 17,950 | |
| 2020.06.24 | நேர் மூலப்பொருட்களுக்கான கொடுப்பனவு (மா, சீனி) | 637140 | | 13,750 |
| 2020.06.29 | காசு வைப்பு – விற்பனை | | 20,500 | |
| 2020.06.29 | மாதாந்த விநியோகச் செலவுகள் | 637141 | | 7,500 |
| 2020.06.30 | மீதி மு./கொ./செ. | | | 5,000 |
| | | | **186,450** | **186,450** |
| 2020.07.01 | மீதி கீ./கொ./வ. | | 5,000 | |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

(1) 2020 யூன் 30 இல் மூலப்பொருள் இருப்பின் கிரயம் ரூபா 6,750/- ஆக இருந்ததுடன், முடிவுற்ற பொருட்களின் இருப்பு காணப்படவில்லை.

(2) 2020 ஏப்ரல் முதல் யூன் வரையான காலப்பகுதிக்காக 2020 யூலை 01 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற நீர்க் கட்டணம் ரூபா 1,350/- மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா 7,200/- ஆகியவற்றுக்கான பட்டியல்கள் 2020 யூலை மாதத்தில் செலுத்தப்பட்டன.

(3) இந்த மூன்று மாத காலத்தில் விற்பனையிலிருந்து சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து, வங்கியிலிடாது ரூபா 6,200/- இனை **அன்னி** தனது தனிப்பட்ட செலவுகளுக்காக எடுத்திருந்தார்.

(4) 2020 யூன் 30 இல் விற்பனையின் மூலம் சேகரிக்கப்பட்ட தொகையான ரூபா 7,800/- ஆனது 2020 யூலை 01 ஆந் திகதியே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

(5) உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 2 ஆண்டுகளாக இருப்பதுடன் அது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்யப்படுகிறது.

(6) சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

2020 யூன் 30 ஆந் திகதியில் **அன்னியின் ஒன்லைன் உணவுகளின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

**வரையறுக்கப்பட்ட பியூட்டி மார்ட் (தனி) கம்பனியின்** 2020 மார்ச் 31 இல் பரீட்சை மீதி கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் - 2019 ஏப்ரல் 01 இல் (2,000,000 சாதாரண பங்குகள்) | | 16,000 |
| 2019 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 11,710 |
| பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| எந்திரம் | 20,000 | |
| மோட்டார் வாகனம் | 8,800 | |
| 2019 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்: | | |
| எந்திரம் | | 8,000 |
| மோட்டார் வாகனம் | | 2,200 |
| 2020 மார்ச் 31 இல் தொக்குகள் | 6,200 | |
| வியாபார வருமதிகள் | 9,650 | |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 9,720 | |
| வியாபார சென்மதிகள் | | 1,500 |
| 2019 ஏப்ரல் 01 இல் ஐயுறவுக் கடன் ஏற்பாடு | | 430 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 150 |
| விற்பனை | | 27,000 |
| விற்பனைக் கிரயம் | 10,700 | |
| அலுவலக வாடகை | 900 | |
| மின்சாரம் | 940 | |
| நீர் மற்றும் தொலைபேசி | 425 | |
| விளம்பரப்படுத்தல் | 800 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 2,200 | |
| விற்பனை அணியினருக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 500 | |
| வங்கிக் கட்டணங்கள் | 50 | |
| செலுத்தப்பட்ட தனிச்ச வட்டி | 300 | |
| காப்புறுதி | 240 | |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 365 | |
| 12% தனிச்சங்கள் | | 5,000 |
| ஆண்டிற்கான வருமான வரிச் செலவுகள் | 200 | |
| | **71,990** | **71,990** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2020 மார்ச் 31 இல் கணக்கெடுக்கப்பட்டு கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கானது கணக்குகளில் எடுக்கப்பட்டது. எனினும், பின்னர் 2020 ஏப்ரல் 05 இல் ரூபா 40,000/- கிரயமான, தொக்கின் ஒரு பகுதி காலாவதியாகி இருந்ததுடன் அது தொடர்பில் செம்மையாக்கம் எதுவும் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

(2) பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். அவற்றின் பயன்தரும் ஆயுட்காலங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| எந்திரம் | : | 5 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனம் | : | 4 ஆண்டுகள் |

(3) 2020 மார்ச் 31 இலான அட்டுறு மின்சாரச் செலவுகள் ரூபா 80,000/- கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்.

(4) கொவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காரணமாக, வியாபார வருமதிகள் தொகை ரூபா 270,000/- ஆனது அறவிடமுடியாததாகப் பதிவழிப்புச் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் 2020 மார்ச் 31 இல் காணப்படும் வியாபார வருமதிகள் மீதியின் மீது 5% இல் ஐயுறவுக் கடன் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

(5) வரிமதிப்பாண்டு 2019/20 க்கான வருமான வரிச் செலவாக ரூபா 200,000/- கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்டது. எனினும், பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீடானது வரிமதிப்பாண்டு 2019/20 க்கான வருமான வரிச் செலவாக ரூபா 275,000/- இருக்க வேண்டுமெனக் காட்டியது.

(6) 2019 ஏப்ரல் 01 இல் கம்பனியானது ஒவ்வொன்றும் ரூபா 100/- பெறுமதியில் 50,000 எண்ணிக்கை யிலான 12% தனிச்சங்களை வழங்கியது. இதன் மீதான வட்டி அரையாண்டிற்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும்.

(7) 2020 மார்ச் 01 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பங்கொன்று ரூபா 10/- விலையில் உபகாரப் பங்குகளை (bonus shares) வழங்குவதன் மூலம் கைக்கொள் இலாபத்தில் இருந்து ரூபா 8,000,000/- இனை மூலதனப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. தேவையான சகல சட்டப் படிமுறைகளும் 2020 மார்ச் 31 இல் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(8) பணிப்பாளர் சபையானது நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக 2020 மே 22 இல் அங்கீகாரம் வழங்கியது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

முகாமைத் தேவைகளுக்காக **வரையறுக்கப்பட்ட பியூட்டி மார்ட் (தனி) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (14 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று (11 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |